# தமிழ் ஈழப் போர்ப் பரணி

VALLUVAR PADIPAKAM
198.AV.DIV.LECLERC
93430, VILLETANEUSE
FRANCE



உணர்ச்சிக் கவிஞர்
**சிங்காரவேலன்**

**உணர்ச்சிக் கவிஞர் பதிப்பகம்**
2, காவேரி சாலை
தேவதானம்
திருச்சிராப் பள்ளி—620 002
தமிழ் நாடு

விலை : ரூ. 10-00

# போர்வாளாய் கவிபுனையும் உணர்ச்சிக் கவிஞர்

சிங்கார வேலன்என் அன்பு நண்பர்
சீர்திருத்தத் தனித்தந்தை பெரியார் மீதே
மங்காத பற்றுடையார்; அறிஞர் அண்ணா
மதிப்பறிந்த சிறப்புடையார்! கவிதைப் போர்வாள்!
பொங்காத பால்போல இருப்பார்! ஆனால்
பொங்கியெழுந் தால் இவரோ முழங்கும் சிங்கம்!
சங்கொலிபோல் இவர்கவிதை ஒலிக்கும்; ஏட்டின்
சரித்திரத்தில் என்றுமிவர் புகழே ஓங்கும்!

மனக்கோட்டை கட்டாத மனிதர்; நல்ல
மலைக் கோட்டைத் திருச்சியில்வாழ் புனிதர்; வாழ்வுக்
கணக்கேட்டைப் புரட்டுகையில் இவர் உழைப்பு
கனித்தமிழை வளர்த்ததனை அறிவோம்
வணக்கத்திற் குரியஇவர் இனஉணர் வூட்டி
வருகின்ற வரலாற்றை உணர்வோம்; பொன்னி
மணந்தோடும் திருச்சிமா வட்டம் தன்னில்
மணித்தமிழுக் கணிசேர்க்கும் செயலர்; வீரர்!

செவிக்குணவு தருகின்ற பேச்சில் வல்லார்!
சீரழிக்கும் பகற்கனவு கண்டி டாமல்
கவிக்கனவு காணுகின்ற கவிஞர்; நல்ல
கருத்துமணி கவிநூலை புனைந்த ளித்தார்;
தவிக்கின்ற தமிழ்மக்கள் துயரம் போக்க!
தமிழ்வளர்க்கும் இவர்வாழ்வில் நித்தம் வெற்றி
குவிக்கட்டும்! எனச்சொல்லிப் போற்று கின்றோம்!
கொஞ்சுதமி ழால் இவரை வாழ்த்து கின்றோம்!

அருட்திரு முத்துக்குமாரசாமித்
தம்பிரான் அடிகள்!

(திருவாவடுதுறை ஆதீனம்)

பேராசிரியர் தீரன் க.மு.

மாநிலத்தலைவர்

பாட்டாளி மக்கள் கட்சி

தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்

ஆண்டிமடம் தொகுதி


உலகத் தமிழர்களே!
சலசலவெனப் பெருக்கெடுத்து ஓடி வரும்
அருவி வெள்ளம் என, தங்கு தடையின்றி ஓடி
வருவதே தமிழக உணர்ச்சிக்கவிஞரின்
உணர்ச்சிப்பாக்கள்.
படிக்கப் படிக்க மொழி உணர்வு உந்தும்!
இன உணர்வு பொங்கும்!

வாசகர்களே!
உணர்ச்சிக் கவிஞர் சிங்கார வேலனின்
போர்ப்பரணி கவிதைகளைப் படியுங்கள்
படித்ததைப் பிறருக்குச் சொல்லுங்கள்
பிறரையும் படிக்கச் செய்யுங்கள்.
பாடகர்களே! இவ்வீரக் கவிதைகளை
இசை அமைத்து ஒவ்வொரு மேடையிலும்
பாடுங்கள்.

இதழ் ஆசிரியர்களே!
உணர்ச்சிக் கவிஞரின் உணர்ச்சிப்
பாக்களை நீங்கள் நடத்தும்
இதழின் ஒவ்வொரு வெளியீட்டிலும்
வெளியிட்டு
உலகத் தமிழ் இனத்திற்கு
தமிழ் இன உணர்வை
ஊட்டிட உதவுங்கள்


022

VALLUVAR PADIPAKAM
198.AV.DIV.LECLERC
93430,VILLETANEUSE
FRANCE


அன்புடன்

தீரன்

## Author's Heart Heaved TO PEN

In Continuation of my Book **"Varalatril TamilEelam'** I dedicate these Lyrics of Liberation to my Tamil Brethren.

The Dawn of a Sovereign Tamil Nation is the crux of these verses. Poetry has been defined as "a spontaneous overflow of powerful feelings."

Wine buried underneath for several years, gets added Power. Just like that, when the suppressed emotions, find expression, they get a new vigour.

But my words are more than wine, as they sweep, like a broad sword through the heads of those who deny Human rights.

My emotional pieces are more powerful than Atom Bombs and missiles destroying Imperialism.

My verses are made, not of magnet, but of marvellous Fabric of Tamil words.

My words are volcanoes!
My thoughts are earthquakes!
I am an ardent Lover of Peace
But My Brethren are in the Deadly Battle,
**O, my Tamil comrades!**

Forming together is a well beginning!
Marching together is progress!
Fighting together is SUCCESS!

***UNARCHIK KAVINGNAR***
**SINGARAVELAN**

2, KAVARI SALAI
DEVEDANAM
THIRUCHIRAPALLI-620002
TAMIL NADU
S.INDIA

3

# தமிழ் ஈழப் போர்ப்பரணி

உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன்

## வென்றிடு விடுதலையை !

வேலெடுத்து வில்லெடுத்து வீரர் கூடுவர்! - ஈழம்
வெல்க வெல்க என்று தமிழர் வாழ்த்துப் பாடுவர்!
மேலெழுந்து பாய்ந்துவரும் கணையை வீழ்த்துவர்! - அந்த
மேன்மைமிகு வீரமதைக் கவிஞர் பாடுவர்!
காலமெலாம் தமிழர் ஆட்சி மணந்த நாடடா! - இன்று
காளிமகள் மூளிநமை ஆள்வ தேனடா?
புல்லரெல்லாம் தமிழ்க்குடத்தைப் போட்டு டைப்பதா? - நாம்
பூனையாக மானமின்றிப் பார்த்திருப்பதா?

இருகரங்கள் சிறகானால் பறந்து செல்லுவோம்! - எம்
இருகால்கள் துடுப்பானால் மிதந்து செல்லுவோம்!
பருவயிறு கடல்நீரைக் குடித்துத் தீர்த்திடின் - அந்தப்
பாக்சந்தி கடல்தன்னில் நடந்து செல்லுவோம்!
செருக்களத்தில் சிங்களத்தார் படையை வெல்லுவோம்! - அதன்
செருக்கடக்கிக் கயவர்களைச் சிறையில் தள்ளுவோம்!
திருநாளாம் தமிழர்க்கே எந்த நாளடா? - அது
தமிழ்ஈழம் விடுதலையை வெல்லும் நாளடா!

## <u>ஊது சங்கே!</u>

எரிகின்ற தமிழ்ஈழம் நமதே யாகும்!
இன்னலுறும் தமிழர்நம் உறவே யாகும்!
இனி நாமும் பொறுத்திருத்தல் இழிவே யாகும்!
எழுந்தால்நாம்; நரிக்கூட்டம் எரிந்தே சாகும்!

விடுத்திட்ட அம்பைப்போல் பாய்வோம் அங்கு!
விடுதலைநாள் வரும்வரையில் மீளோம் இங்கு!
பாய்புலியை முறத்தாலே விரட்டும் மங்கை!
பாலூட்ட வளர்ந்தோரே ஊது சங்கை!

சர்க்கரையா நமதுஉயிர்! இல்லை; என்றும்
சாகாதா? உறுதியிலை உண்மை யாண்டும்!
சமர்க்களம்நாம் சென்றிடுவோம் வீரம் ஏந்தி!
சதைஉடலைத் தந்திடுவோம் மானம் வேண்டி!

இட்டுச்சொன்ன கட்டளைக்குப் பொட்டு வைப்போம்!
முட்டுக்கட்டை வைப்போரின் மூக்கு டைப்போம்!
கடற்புலிகள் கரும்புலிகள் கடற்போர் தன்னில்
காட்டுகின்ற வீரத்திற்கீ டேது மண்ணில்!

கடற்மடியில் நிகழ்வதெல்லாம் தமிழர்ச் சாவே!
கடலலையின் இசையெல்லாம் இரங்கற் பாவே!
**'குட்டிமணி' தங்கத்துரை திலீபன்** போன்றோர்!
கொலைக்களத்தைமுத்தமிட்டே புகழை வென்றார்!

சொன்னதையே செய்வோமென்ற 'கிட்டு' அண்ணா
சுடர்வீசும் நினைவுக்கொடைஆனார் நெஞ்சில்!
**கந்தையா கஜேந்திரன் பேரின்ப நாதன்**
**கலையமுதன் செல்வம்**என மறவ ரெல்லாம்
பிணம்தின்னும் பேய்களுக்கு இரையே யானார்!
பெருமைசேர் தமிழ்ஈழ நிலவே யானார்!
முத்துமுத்தாய்ப் பூத்தொடுக்கும் முல்லைப் பெண்கள்
முட்புதரின் மறைவினிலே போர்பு ரிந்தார்!

பூவாக மலர்ந்தோரே புயலாய் ஆனார்!
பூநாகம் தனைச்சுட்டு பூமிச் சாய்ந்தார்!
போர்மறவர் ஈந்துள்ள எலும்புக் குன்றில்
புலர்ந்துவரும் தமிழ்ஈழக் கொடிப றக்கும்!

☆☆☆☆☆

ஏ. தமிழா! ஏ. தமிழா!
எங்கேஉன் தமிழுணர்வு?
வா.தமிழா வா. தமிழா!
வரலாறு நாம்படைப்போம்!
ஊதுசங்கே! ஊதுசங்கே!
ஒன்றானார் தமிழரென்றே
உலகத்தார் செவிகளிலே
ஒலித்திடவே ஊதுசங்கே!

# கொட்டிடு போர் முரசு!

மீசை வளர்க்கின்ற தமிழின மக்களே
வீட்டுக்கோர் ஆண்பிள்ளை சேர்ப்பீர்! - ஈழ
விடுதலைப் போரில்பங் கேற்பீர்!

பிறக்கும் குழந்தைகள் சுதந்திர மூச்சினைப்
பெற்றிடச் செய்யவே வாரீர்! - மறு
பேச்சில்லை மண்மீட்கும் போரில்!

ஈன்றநம் அன்னையர் இழக்கின்றார் கற்பினை
இனியென்ன வேலைநும் வீட்டில்! - அட
எழுவீரே கிளிநொச்சிக் காட்டில்!

கூட்டுச் சிறையிலே குயிலை அடைத்தாலும்
குயில்பாட்டு வெளியிலே கேட்கும்! - உன்
கோரிக்கை உலகினை ஈர்க்கும்!

இழந்தோமே யாழ்க்கோட்டை என்பதுன் ஏக்கமோ?
இலையுதிர்ந்து துளிர்வதைப் பாரும் - !நாளை
இருள்நீங்கி ஒளிவந்தே சேரும்!

கதவின்றி வீடுகள் காத்துக் கிடக்குதே
காளைநீ திரும்பும்நாள் உண்டு! - யாழ்க்
கடல்மீன்கள் பாடுமே அன்று!

பாறை பிளந்துமே ஊற்றுக்கண் தேடிய
பரம்பரை சார்ந்ததமிழ் மகனே! - நீ
பகைவென்று வாழும்நாள் வருமே!

# ஒலிக்கட்டும் போர்ப்பறை!
# கிளம்பட்டும் புலிப்படை!

மலைமேலே கொடிநட்டான் சேரன்! - எங்கும்
மண்மேலே புகழ்நட்டான் சோழன்! - தன்
தலைமேலே கல்சுமந்தான் வடக்கு நாட்டான்
தன்முகத்தால் முத்தமிட்டான் சேரன் காலை!

அலைகடலே! எரிமலையே! தமிழா! எங்கும்
ஆர்த்தொலிக்கும் படைமுரசே ஆண்மைக் கோவே!
அடங்காத சிங்களவன் தலைஅ றுப்போம்
அவன்சிந்தும் குருதியினை அள்ளி அள்ளி
தரைமெழுகிக் காட்டிடுவோம்! தமிழர் கூடித்
தமிழ்க்கொடியை ஏற்றிடுவோம்; தமிழீ ழத்தில்!

பூப்பறிக்கும் கரங்களெல்லாம் இனிமேல் வெற்றிப்
போர்வாளைக் கொடுக்கட்டும் கணவன் கையில்!
பூங்காவில் உலவுவதும், முத்தம் கேட்டுப்
பூவையிடம் கொஞ்சுவதும் நின்றி டட்டும்!

போர்ப்பறைகள் ஒலிக்கட்டும்!
புலிப்படைகள் கிளம்பட்டும்!
புழுக்கூட்டம் மடியட்டும்!
புகழீழம் மலரட்டும்!

# முழக்கமிடு போர் முழக்கம்!

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!
ஆண்மைகொண்டோர் போர்முனையில்
அச்சமென்ப தில்லையே!

இலங்கையினை ஆள்வோரிடம் இரக்க மென்ப தில்லையே
இந்தியத்தை ஆள்வோர்க்கும் இரக்க மென்ப தில்லையே!

அரக்கிமகள் சந்திரிகா ஆளும் நாட்டில் தொல்லையே
அவள்நடத்தும் படுகொலைக்கோர் எல்லையென்ப தில்லையே!

சேரசோழ பாண்டிமன்னர் உலவி வந்த நாட்டிலே
சேதுமன்னர் உறவுகொண்ட மறவர் வாழும் தீவிலே

சூழ்ச்சிவலை சந்திரிகா சிலந்தி போன்று ஆடுறாள்
சூரரென்றும் வீரரென்றும் தமிழர் பேசி தூங்குறார்!

புலிப்படைக்கும் எலிப்படைக்கும் போர் நடக்கும் நாளிலே
புறம்பாடி களம்வென்ற வலிமை மிக்க தமிழரே!

அலைகடலாய் மறவரெல்லாம் அணிவகுத்துச் செல்லுவோம்
அறம்அழிக்கும் சிங்களரைத் துண்டு துண்டாய் வெட்டுவோம்.

ஆமைகூட தமிழகத்தில் ஆனை யோடு போரிடும்
ஆண்மையுள்ள தமிழினமே அஞ்ச வேண்டாம் எழுகவே!

ஊர்ந்துசெல்லும் எறும்புகூட புற்றில் ஆட்சி நடத்திடும்
உலகோரே அறிவீரே ஆட்சி மீட்கும் போரிது!

குப்பைமேட்டு கோழிகூட கொத்தி விரட்டும் பருந்தினை
குவலயத்தை ஆண்டஇனம் கூனி குறுகி வாழ்வதா?

எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சில் தின்னும் நாய்களே
எட்டுத்திக்கும் 'நாம்தமிழர்' இணைந்து விட்டோம் போரிலே!

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
ஆண்மைகொண்டோர் போர்முனையில்
அச்சமென்ப தில்லையே!

☆☆☆☆☆

நாதியற்ற தமிழினத்தின் நீதிகேளடா!
நாடாண்ட எல்லாளன் சாதிநீயடா!
வீதியெல்லாம் ஈழப்போரின் சேதிகூறடா!
வேங்கையெனப் பாய்ந்துபகை மோதிப்பாரடா!

அடிமைகளாய் நாம்தமிழர் வாழ்வதேனடா!
ஆர்ப்பரிக்கும் கடலலையாய் எழுந்துபாயடா!
மடியேந்தா மாத்தமிழர் மரபுநீயடா!
மானமீட்கும் போர்இதுவே வெற்றிகாணடா!

# பிரபாகரன் தலைமையில் வெல்லடா

வெற்றிகள் குவித்திடும் வாளடா! - அவன்
விடுதலைப் புலிகளின் தோளடா
ஒற்றையன் என்பதே பொய்யடா! - தமிழ்
உலகமே அவனிரு கையடா!

கத்திநீ பேசுதல் வீணடா - இனி
களபூமி போர்க்குரல் தானடா!
புத்தன்கை போர்வாள் ஏனடா? - உன்
புறப்பாட்டில் போர்க்களம் காணடா!

ஈழமே எமதென்று கேளடா! - அதை
ஏற்காத சிங்களன் தூளடா!
வேழமே உன்வீரம் காட்டடா! - ஈழ
விடுதலை விளக்கினை ஏற்றடா!

அராபத் யாசர்போல் நில்லடா! - பல
ஆண்டுகள் போரினைச் சொல்லடா!
பேராற்று வெள்ளமாய்ச் செல்லடா! - **வேலு**
**பிரபாகரன்** தலைமையில் வெல்லடா!

## தூக்கிடு வாளை!

வெறிகொண்ட சிங்களவன்
வெட்டிவெட்டித் தமிழினத்தை
வீதியிலே குவிப்பதனைப் பாரடா! - வீர
வேங்கையெனத் தமிழ்மகனே பாயடா!

கண்ணகியின் தங்கையரைக்
கற்புநெறி மங்கையரைக்
கட்டிவைத்துக் கற்பழிக்கும் பாவி! - அவன்
கருவறுக்க அழைக்கின்றேன் கூவி!

பொங்குதடா பொங்குதடா
பொன்னீழம் பொங்குதடா!
தமிழர்தம் உள்ளமெலாம் கொதிப்பு! - தனித்
தமிழ்ஈழம் பெறுவதில்தான் களிப்பு!

ஆறுகோடித் தமிழ்மறவர்
ஆழ்கடலைத் தாண்டிவிட்டால்
நரிப்பிறவி சிங்களவன் தூளடா! - ஈழ
வரிப்புலியே தூக்கிடுவாய் வாளடா!

☆☆☆☆☆

தமிழ்ஈழம் தமிழ்ஈழம் என்றேபாடு!
தமிழ்ஈழ மறவர்க்கே இல்லைஈடு!
நாம்தமிழர் நாம்தமிழர் என்றேகூடு!
நமதடா இந்தநாடு என்றேபாடு!

# அடித்திடு! நொறுக்கிடு!!

முத்தே சொத்தே முதிர்க்கனிக் கொத்தே!
சித்திரை நிலவே சிரிக்கும் மலரே!
கொஞ்சும் கிளியே கோலச் சிலையே!
நெஞ்சின் நினைவே நெருங்கி வாவென
முத்த ஒத்திகை முத்திரைத் திருமணம்
நித்தம் நிலவில் நடத்தின போதும்!
கனலில் புழுவாய்த் தமிழினம் காணீர்!
களிப்பைத் துறப்பீர்! களத்தில் குதிப்பீர்!

உனக்கென மானம் ஈனம் இலையா?
உனக்கெனச் சூடு சொரணை இலையா?
நீஒரு புல்லா? பூண்டா? சொல்வாய்
நீஒரு கல்லா? மண்ணா? கழல்வாய்.
காளைநீ துடித்தெழு கணையினைத் தொடுத்திடு!
கயமைச் சிங்களக் காடையை வீழ்த்திடு!
நாயினும் கெட்டார்! நரிகளை ஒத்தார்!
நம்இன மீனவர் படகினைச் சுட்டார்!

அடித்திடு! நொறுக்கிடு! குத்திடு! வெட்டிடு!
அனற்பொறி குண்டினை அவர்மேல் கொட்டிடு!

பந்தினை உதைத்தால் ஓடும்! - சிங்கள
மந்தியை மிதித்தால் சாகும்!

# எரித்திடு இனப்பகையை!

மூண்டது நெருப்பு மொய்த்தது துயரம்
முத்தமிழ்த் தீவில் நுழைந்தது அரவம்!
மாண்டனர் தமிழர் ஈழத் தீவில்
மடிந்தனர் மீனவர் கச்சத் தீவில்!
நீண்டது குருதி நீள்கடல் அலையில்!
நிறைந்தன பிணங்கள் தமிழன் கடலில்!
பாண்டியர் பரம்பரை வடிப்பது கண்ணீர்!
பராரிச் சிங்களர் குளிப்பதோ பன்னீர்!

ஆண்டவன் தமிழன்; அழகாய்த் தீவை
ஆக்கினன் தமிழன்; சரித்திரம் சொல்லும்!
பூண்டபொன் அணியும் முத்தும் மணியும்
புவியோர் வியக்கத் தந்தவன் தமிழன்!
தோண்டவே இயலா நிலத்தைத் தோண்டி
தொகைதரும் தேயிலை நட்டவன் தமிழன்!
வெண்நிறத் தேக்கை வியர்வையில் வளர்த்தோன்
வேதனைத் தீயில் வெந்திடும் நிலைமை!

உரிமை கேட்டுப் போரிடும் புலிகள்
ஒளிப்பொன் ஈழம் தனதெனக் கூறி
வரிப்புலி எனவே பாய்ந்திடும் அருமை!
வன்முறை அதுவெனக் கதைப்பதோ கயமை!
அரியணை பறித்தே ஆளும் கொடியோர்
அழிப்பது தமிழின மக்களைக் கொடுமை!
எரிவிழி காட்டிப் புயலாய் எழுவீர்!
இனப்பகை எரிப்பீர்! ஈழம் பெறுவீர்!

# பொசுக்கிடு கொசுப்படையை!

நாடாண்ட தமிழரினம் நாதியற்றுச் சாவதுவோ
நாடோடி சிங்களவர் நரியாட்டம் போடுவதோ
அடைக்கலமாய் வந்தோரை அகதிகளாய் ஆக்குவதோ
ஆதரவாய்க் குரல்கொடுத்தால் தடாச்சட்டம் நீட்டுவதோ
அலைகடலாய் எரிமலையாய் ஆர்த்தெழுவோம்; சிங்களரை
அழித்திடுவோம்! குவித்திடுவோம்! அவர்சிந்தும் குருதியினால்
தரைமெழுகிக் கோலமிட்டுத் தமிழ்க்கொடியை ஏற்றிடுவோம்!
தமிழரெல்லாம் அணிதிரண்டே தமிழ்ப்பகையைச்
சாய்த்திடுவோம்!

**புளியங்குளம், ஒட்டுச்சுட்டான் மாங்குளத்தில்** நம்தமிழர்
புல்லர்களால் தாக்குண்டு பொழுதெல்லாம் சாவதுவோ?
பாய்புலியை முறம்கொண்டு பாய்ந்தோடச் செய்தயினம்
பாவிகளின் வெறிப்பசிக்குப் பலியாகி மாளுவதோ?
ஆளுகின்ற சந்திரிகா அனுப்புகின்ற இராணுவமோ
அன்றாடம் குண்டுகளைத் தமிழர்மேல் வீசுவதோ?
அனுமதியோம்; அனல்கக்கும் அணுக்குண்டாய்
உருவெடுப்போம்!
அலைகடலைத் தாண்டிடுவோம் கொசுப்படையை
பொசுக்கிடுவோம்!

# தூக்கிடு அணுக்குண்டை!

அந்நாளில் இலங்கையினை அரசாண்ட மறத்தமிழன்
அனற்புழுவாய்த் துடிதுடிக்க அண்டவந்த சிங்களவன்
அரியணையின் மீதமர்ந்து ஆளுமையின் வான்மிதந்து
ஆணவத்தைத் தலைச்சூடி ஆடுகிறான் தனைமறந்து
வாள்கொண்டு பகைவென்று வான்முட்ட வாழ்ந்தமகன்
வாலற்ற குரங்கின்கை மாலையெனச் சீரழிய
பாய்புலியை முறங்கொண்டு பாய்ந்தோடச் செய்தமகள்
பாம்பின்வாய் தேரையெனப் பலியாகிச் சாவதுவோ?

அடுக்காஇக் கொடுமைகளைத் தடுக்காதத் தமிழர்களே
எதற்காக இருக்கின்றீர்? எரிமலையாய் எழும்பிடுவீர்!
புலிப்போத்தாய்ப் புறப்பாட்டாய்ப் புயற்காற்றாய்க் கடல்தாண்டி
புழுக்கூட்டைப் புனற்பாம்பைப் பொடியாக்கிப் புதைத்திடுவீர்!
தமிழீழ விலங்கறுத்துத் தமிழாட்சி தனையமைத்து
தமிழ்மறவர் தோள்நிமிர்த்தித் தமிழீழக் கொடிஉயர்த்தி
அனைத்துலக மன்றமதில் அருந்தமிழன் அமர்வதற்கே
அணுக்குண்டைத் தூக்கிடுவீர், அலிப்பேச்சை நிறுத்திடுவீர்!

# குவித்திடு வெற்றிகளை!

நெஞ்சை நிமிர்த்துவீர் தமிழர்க ளேயினி
நேருக்கு நேர்நின்று பார்ப்போம் - ஈழப்
பகைவரைப் போரிட்டுத் தீய்ப்போம் - அன்று
பாராண்ட தமிழினம் அகதிகளாய் அலைகின்ற
காட்சியைத் தலைகீழாய்ச் சாய்ப்போம் - இழந்த
ஆட்சியை மாட்சியை மீட்போம்!

விலங்கெனத் தமிழரைச் சிறைகளில் பூட்டியே
வாட்டிய கொடுமைகள் போதும்! - அதை
மாற்றிட ஓரணி சேரும் - ஈழ
விடுதலை ஒன்றேதான் தமிழரின் குறியென
நாட்டிட வேபடை கூடும் - உணர்
ஹூட்டிட வேகவி பாடும்!

பூனைபோல் வந்துமே யானைப் படைக்குள்ளே
புகுந்துமே ஏய்க்கிறார் பாரும் - வங்க
பூமிக்கே அவர்களை ஓட்டும்! - இங்கு
மானமே பெரிதென்ற வள்ளுவன் வழிவந்த
மல்லர்தம் போர்க்குரல் கேளும் - வெற்றி
மலைபோல குவிவதைப் பாரும்!

# அய்நாவில் தமிழ்ஈழம் அமர்ந்திடுமே!

## விடுதலைப் புலிகள்

இவர்கள்:

கொள்கையில் குன்றங்கள்!
குறிக்கோளில் கூர்வாட்கள்!
உறங்காத தேனீக்கள்!
ஒலிக்கின்ற போர்ப்பறைகள்!
விழிநோக்கி வேல்பாய்ந்தும்
விழி இமைக்கா வேங்கையர்கள்!
புதர் மறைவுப் போரினிலே
புவி வியக்கும் போர்மறவர்!

இவர்கள்:

பறக்கின்ற உந்துகளாம்!
பாய்கின்ற குண்டுகளாம்!
செருவுடலில் தமிழ் ஈழம்
செதுக்கிவரும் சிற்பிகளாம்!
தாயகத்தை மீட்பதற்கே
தற்கொலைக்கும் துணிந்தவராம்!
சயனட்டே சாக்லேட்டாம்!
சாதனையோ தனி நாடாம்!

இவர்கள்:

அழியாமல் தாய்வாழை
அடிவாழை பிழைப்பதில்லை!
தாய்வயிறு வெடிக்காமல்
சேய்நண்டு பிறப்பதில்லை!
பொன்மொழியின் அடிப்படையில்
போர்க்களத்தில் நிற்பவராம்!

சாக்காடும் பூக்காடும்
சமமென்றே ஏற்பவராம்!

இவர்கள்:

ஒப்புரவு வேடத்தால்
ஒப்பந்த பேச்சுகளால்
ஏமாற்றும் பூணையிடம்
ஏமாறும் எலிகளல்லர்!
போர்ஒன்றே தீர்வுயெனப்
புறம்பாடும் புலிகளிவர்!
தன்குருதி வண்ணத்தால்
தமிழ் ஈழம் வரைகின்றார்!

**பெண்புலிகள்!**

இவர்கள்:

புகைக்குண்டை மடிசுமந்தே
பகைக்களத்தில் பாய்ந்திடுவோர்!
பூத்தொடுக்கும் கரங்களினால்
போர்வாளை ஏந்திடுவோர்!
தணியாத இவர்காதல்
தமிழ்ஈழ விடுதலையாம்!
ஈழத்தின் விடுதலைநாள்
இளம்புலிகள் திருமணநாள்

போர்ப்புயலில் பெண்புலிகள்
பூங்கரத்தால் ஏற்றிவைத்த
சுதந்திரத்தின் சுடர்விளக்கைச்
சுழற்காற்றே வணங்குதம்மா!
தமிழ்ப்புலிகள் குருதியிலே
தழைக்கின்ற தமிழ்ஈழம்
அகிலத்தில் ஓர் நாடாய்
அய்நாவில் அமர்ந்திடுமே!

# ஆணவமே! அமெரிக்காவே!

அமெரிக்கா!
அருங்கொலம்பஸ்
பேர்ள் நகரை
(PEARL HARBOUR)
பாய்ந்தவர்மேல்
வன்முறையின்
'வரலாற்றில்
இமயத்தில்
ஈழத்தில்
இழந்திட்ட
எழுச்சிமிகு
உனக்கென்ன
ஓலமிட்டுப்

ஈரானும்
இடையில் நீ
வடவியட்நாம்
வல்லூறு
சிறுபான்மை
சக்தியென
(TERRORISM)
அடிமைகளின்
அவதரித்த
அம்மண்ணை
அடக்குகின்ற
கடிபட்டு
கடிக்கின்ற
இந்நாளில்

இருக்கிறதே

அமெரிக்கா!
கண்டெடுத்த
ஜப்பானியர்

அணுக்குண்டை
வழிகாட்டி
தமிழ்ஈழம்'
கொடிபொறித்து
அடிமைகளாய்
வாழ்வுரிமை
போராட்டம்
கடுஞ்சீற்றம்
பாய்கின்றாய்

ஈராக்கும்
புகுந்தங்கு
தென்வியட்நாம்
போல்மேலே
இனமென்றால்
பழிசுமத்தித்

விலங்கொடித்த
நாடன்றோ
ஆள்வோரே
சட்டங்களை
மாள்வோரைக்
பாம்பிற்கே
அடிமைக்கென

கொழும்பினிலே

அமெரிக்காவே!
அமெரிக்காவே!
தொட்டதற்கே

வீசினையே
அமெரிக்காவே!
நூல்படிப்பாய்!
வாழ்ந்தஇனம்
வாழ்வதுவோ?
மீட்டெடுக்க
அவர்நடத்த
அமெரிக்காவே!
புலிப்படைமேல்!

இரண்டாக
கொட்டமிட்டாய்!
துண்டாக
வட்டமிட்டாய்!
பயங்கரத்தின்
தடைவிதிப்பாய்!

ஆபிரகாம்லிங்கன்
அமெரிக்கா!
உரிமைப்போரை
நீட்டுவதா?
காத்திடாமல்
பால்வார்ப்பதா?
குகாம்பனித்தெரு
(SLAVE ISLAND)
இருக்கலாமா?

பணமலைமேல் படுத்துறங்கும் அமெரிக்காவே!
பணமுதலை கைகுலுக்கும் அமெரிக்காவே!
அகிலத்து அங்காடி அனைத்திலுமே
அலங்காரப் பொருள்விற்கும் அமெரிக்காவே!
எண்ணெய்க்கடல் எனவிளங்கும் **குவைத்நாட்டை**
இருகரத்தால் **சதாம்உசேன்** பறித்தபோது
பேச்சுமன்ற வார்த்தைகளைத் தொடர்ந்திடாமல்
**பேட்ரியாட்** ஏவுகணை தூக்கிவந்தாய்!
வன்முறையா ளர்என்றே பட்டம்சூட்டி
வையகத்தார் உனை அன்று ஒதுக்கவில்லை!
எங்கெங்கே மென்முறைகள் தோற்கிறதோ
அங்கங்கே வன்முறைகள் உதயமாகும்

பண்டார வன்னியனின் பரம்பரையைப்
பழிதீர்க்க எண்ணிய நீ புலிப்படையை
வன்முறையா ளர்என்றே தீர்ப்பளித்தாய்
வாளேந்தும் கொலைப்படைக்குக் கைகொடுத்தாய்!
அமெரிக்க இராசாங்க திணைக்களத்தின்
அலுவலகர் **'பிளப்வில்கொக்ஸ்'** இலங்கை வந்தார்!
முந்தானை விருந்தினிலே மூழ்கிப்போய்
முடிவெடுத்தார் புலிப்படையை அழிப்பதற்கே!

'உலகவர்த்தக சந்தை'யதன் உயர்மாடியில்
ஒரு குண்டு வெடித்திடவே புலிப்படைமேல்
பொய்யான வதந்திகளைத் தூவிவிட்டுப்
புலிப்படைக்கு உன்நாட்டில் புள்ளிவைத்தாய்!

அமெரிக்க சுதந்திரப்போர் வரலாறுண்டு
ஆயுதங்கள் தாங்கியவர் அதிலுமுண்டு

கண்ட சங்கம் நிமிட மனிதர் இயக்கமேந்தி
(Continent Association - Minute men)
கடும்போரை **வெக்சிங்டனில்** செய்தீரன்று!
செவ்விந்தியர் போல்அன்று வேடம்பூண்டு
கவிழ்த்தீர் 'டீ' கப்பலினைப் **பாஸ்டனிலே!**
விடுதலைநீ பெற்றிடவே துமிக்கியேந்தி
வாசிங்டனார் தலைமையிலே போர்புரிந்தாய்!
சிந்தியசெங் குருதியினால் சுதந்திரதேவி
சிலைவடித்து **நியூயார்க்கில்** நிற்கவைத்தாய்!

உன் வழியில் ஈழ மண்ணில் விடுதலைப்போர்
உருவானால் பொறுக்காது உறுமுகின்றாய்!
புலிப்படையை பயங்கரவாத இயக்கமென்றாய்!
புகழ் **'டெலிகிராப்'** நிருபரது கூற்று இதோ
'அமைதிப்படை வீரர்களைக் கைதுசெய்த
அறிவுப்படை மனிதாபி மானத்தோடு
கேட்டதெல்லாம் கொடுத்துதவி எதிர்படைக்குக்
கெடுதலொன்றும் செய்திடாது விடுவித்தினர்'!

ஆய்வுபல நடத்துகின்ற அமெரிக்காவே!
அண்டம்பல காட்டும்உன் கண்ணாடியில்
சிங்களவர் தமிழர்களை அடிமையாக்கிச்
சித்திரவதைச் செய்துவரும் காட்சிபாரும்!

ஈழத்தில் துயரங்களின் ஆக்கிரமிப்பு :-

பதுங்குக் குழிகளில்
பதுங்கி வாழ்ந்தும்
நொந்தும் வெந்தும்
நைந்தும் நலிந்தும்

பட்டினிப் பசியுடன்
பாமரர் வாழ்க்கை!
பச்சை மழலையர்
நெருப்பில் தூக்கம்!
பருவம் முதிர்ந்தவர்
விடுதலை ஏக்கம்!

கழனியில் உழுவோர்
கண்விழிப் பார்வை
விண்வழிப் போகும்!
வெடிகுண்டு வீழும்!
ஓடை யெனவே
ஓடும் குருதியும்!

எரியும் குடில்கள்!
எரியா அடுப்புகள்!
மருந்தே இல்லா
மருத்துவ மனைகள்!
வாங்குவோர் இல்லா
வாணிபக் கடைகள்
மங்கையர் இதழ்களில்
மரண ஓலம்!
மறவர் நாக்கில்
மாய்க்கும் சயனைடு!

கண்ணில்லா மனிதர்கள்!
காலில்லா முடவர்கள்!
வாழ்விழந்த பெண்மணிகள்
வன்முறையின் சாட்சிகளாம்!
குலைகுலையாய்த் தமிழர்தமைக்

கொன்றுவரும் சிங்களவர்
உன்கழுகுப் பார்வையிலே
உத்தமராய் ஆயினரோ!

பாகிஸ்தான் நாடுதன்னைப்
பயங்கரவாத நாடென்றே
அறிவிக்க கோருகிறார்
**அப்துல்லா** காஷ்மீரில்!

ஆட்கொல்லி சிங்களவர்
ஆட்சியினைப் படுகொலைஞர் (GENOCIDE)
ஆட்சியென்றே அறிவிப்பீர்!
அய்நாவில் தள்ளிவைப்பீர்!

இன்றுனது நாட்டினிலே நடப்பதுவோ:-

விடுதலை விரும்பிகட்கு கொடுஞ்சிறை!
விலங்கினும் கொடியோர்க்குப் பள்ளியறை!
உரிமைதனைக் கேட்போர்க்குக் கைவிரிப்பு!
ஊர்க்குடி கெடுப்போர்க்கு பாய்விரிப்பு!
கண்ணியத் தமிழர்க்குக் கைவிலங்கு!
கள்ளச் சிறுக்கிக்குக் காற்சிலம்பு!
பட்டத்து அரசிக்குப் புலிக்கூண்டு!
பரங்கியர் சேடிக்குப் பூச்செண்டு!

மயிலுக்குத் தடைச்சட்டம்!
மந்திக்கு மலர்வட்டம்!
நீதிக்குப் பலிபீடம்!
நீலிக்கு மணிமாடம்!
உண்மைக்குத் தூக்கு!
பொய்மைக்குக் 'கேக்'கு!

பூப்பந்து
ஆடுவோரே!
புதுக்கதை கேட்பீரே!

குஞ்சுகளுக்குக்
கூடு கட்டியது
குற்றமென
அறிவித்து
அதே கூட்டில் அடைத்தார்களாம்
குருவிகளை!

புலிகளிடம் மோதிடும் பூனையரே!
**பொன்னடியானின்**
போர்க்கவிதை கேளும்!

முடியொன்று வரப்போகுது! - அவர்
முடிமீதும் மடிமீதும்
ஏழையர் கைஓங்கி
அடியொன்று விழப்போகுது! - பேர்
அடியொன்று விழப்போகுது!

☆☆☆☆☆

**அன்று தமிழன் மலிவானான்;**
**இன்று தமிழன் புலியானான்!**

# ஈழத்துப்பரணி

சிங்கள ஆட்சியரே!
உங்கள்
சிந்தனையைத் திருப்பிடுவீர்!
எங்கள் கண்களை
அடிக்கடி
சிவக்க வைக்காதீர்!
எங்கள் கண்ணீரை
அடிக்கடி
வடிக்க வைக்காதீர்!
வல்வெட்டித்துறை வீரனிடம்
விளையாடாதீர்.
விளையாட்டு
ஒருநாள்
வினையாகும்!
உங்கள்
தீமைக்கோர் அளவில்லை!
நீங்கள்
திருந்துதற்கோ வழியுமில்லை!
நாடு என்பது
வெறும் மண்ணல்ல!
அது ஒரு இனத்தின் உயிர்!
அது ஒரு மொழியின் உடல்!
எங்கள்
உயிரைப் பிரிக்காதீர்!
உடலை அழிக்காதீர்!
இதை மீறினால்
இருக்காது உங்கள் முகவரி!

குணம் அற்றோரே!
மனம் விற்றோரே!

உங்கள்
உதடுகளின் அறிவிப்பாம்
"அதிகாரப் பரவல் திட்டம்"
அதைக்கேட்டு
கருவில் இருக்கும் குழந்தையும்
கைகொட்டிச் சிரிக்குமே!

ஏற ஏற
சுமையை
ஏற்றினராம்
ஒட்டகத்தின் மேல்!
இரண்டு குச்சிகளை மட்டும் கீழே இறக்கினராம்;
சுமை குறைந்ததென்று
ஏமாந்ததாம் ஒட்டகம்!

சலுகைகளை அறிவித்து
ஏமாற்றுதற்கு,
ஈழத்தமிழர்கள் ஒட்டகமல்ல!
நாங்கள்
வாள் முனைகள்!
வான் கணைகள்!
நாங்கள்
வில்லேர் உழவர்கள்
வீர மறவர்கள்!
நாங்கள் கேட்பது
தமிழ் ஈழம்!
அதனை மூழ்கடிக்க நினைப்பது முழு மூடம்!
அரியணையில்
அமர்ந்து கொண்டு
படை நடுவில் நின்று கொண்டு
அரற்றுவதும், மிரட்டுவதும்
அறிவீனம்!
நாங்கள்
தனிநாடு கேட்பது தன்மானம்!

தமிழ்ஈழம் கேட்பது தமிழ் மானம்!
சதிகாரி சந்திரிகாவே!
நாங்கள்
சொரணையுள்ள பிறவிகள்!
எங்களை
உன் சுடுநெருப்பு சுடாது!
ஏனெனில்
நாங்கள்
சூரியனின் விழுதுகள்!
நாங்கள்
வெஞ்சமர் என்றால் துஞ்சிடோம்!
சிங்களர் என்றால் அஞ்சிடோம்!
வெற்றி நிச்சயம், என்ற
வெற்றுப்படை கண்டு நின்றிடோம்.
"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
ஈழநாட்டு விடுதலைக்" கென்றே எழும்புவோம்!
இந்த
உணர்ச்சி உந்திட
புரட்சிப் பொங்கிட
போர்ப்பரணி பாடும்
புலிப்படை நாங்கள்!
போர்முழக்கம் எங்களுக்குப்பொங்கல் விழா!

நாங்கள்
உடலால் பலராயினும்
உறுதியில் ஒன்றாயினோம்!
எங்களை அடித்தால்
உளியாக உருவெடுப்போம்!
உங்கள் செருக்கினைச் சிதைத்திடுவோம்!
எங்களைப் புதைத்தால்
முளைப்போம்!
புலிப்பால் குடிப்போம்!

நாங்கள் நீரிலும் குளிப்போம்!
நெருப்பிலும் குளிப்போம்!
சாதனை படைப்போம்!
சரித்திரம் வடிப்போம்!
நாங்கள்
ஈருருளை வாகனத்தின் கருவிகளைக்கொண்டே
எழும்பிடும் விமானம் செய்பவர்கள்!
எங்களைக் கண்டு - அமைதிப்படை தளபதி
**லெப்டினென்ட் சின்கா**
நடுங்கினார்!
தில்லிக்கே திரும்பினார்.

ரோமானியர் எழுந்து வீழ்ந்தனர்!
நாங்கள் வீழ்ந்து எழுந்துள்ளோம்!
நாங்கள்
கருவிலிருந்து கல்லறைவரை
கண்ணிவெடிகளில் நடக்கின்றோம்!
(From Womb to tomb)

ஒற்றை அரசின் துட்ட நாயகியே
அதிகாரப் பரவல் - (சிங்களவரின்)
வடக்கு, கிழக்கு மாகாணப் பிரிவினை -
என்பதெல்லாம்
சத்தமில்லாமல் நடக்கும்
சுத்தமான இனப்படுகொலை!

ஒரு சார்பு ஒய்யாரி சந்திரிகாவே!
நீ -
கண்ணகி அல்ல!
காதகி!
சூளுரைக்காதே!
'புலிப்படையை ஒழிப்பேன் - என்று
கத்தாதே!
சத்தங்கள்
வெற்றியைத் தராது!

வெறிபிடித்த சந்திரிகாவே
விடுதலைப் புலிகளைப் பிடித்திடுவேன்-பிடித்திடுவேன்"
என்று பிதற்றுகிறாயே!
நாங்கள் என்ன
கோழிக் குஞ்சுகளா -
உன் பஞ்சாரத்தில் போட்டு அடைத்துவிட!
நாங்கள்
உலகின் மூலை முடுக்குகளிளெல்லாம் பரவியுள்ள
ஒளி அணுக்கள்!
ஒளிக்கதிரைப் பிடிக்கவும் முடியாது! - அடைக்கவும்
முடியாது!

உனது தடைக்கல்
எங்களுக்குப் படிக்கல்.
புலிப்படைக்கு நீ 'விதி' என்றால்
புலிப்படை உன் தலைக்கு "வெடி"!
நாங்கள்
விதி மாற்றும் புலிகள்!
நீங்கள்
சதி வலையின் எலிகள்!
நாங்கள்
தமிழ்மொழியின் கோபுரங்கள்!
தமிழ் இனத்தின் கேடயங்கள்!

சேயை ஈன்றெடுக்க
தாய் தானே சிந்துவாள்இரத்தம்!
ஆனால் -
ஈழத்தாயை வென்றெடுக்க
சேய்களே சிந்துகிறார் இரத்தம்!
அதன் பொருள் புரிகிறதா!
அடங்காப்பிடாரி சந்திரிகாவே
கொசுக்கள் குடிப்பது
பலரது இரத்தம்!

கொலை மகள் நீ குடிப்பதோ
ஓரினத்தின் இரத்தம்
அது
தமிழ் இனத்தின் இரத்தம்!

**சிங்கள பவுத்த பேரின வல்லாண்மைத் தேவியே!**
எங்கள் இரத்தம் துடிப்பதைப் பார்!
அதன் சத்தம் ஒலிப்பதைக் கேள்!

1. "தமிழர்கள் பகுதிகளிலிருந்து உன் படைகளை அகற்றிடு!
2. நெருக்கடி நிலையை நிறுத்திடு!
3. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி வகுத்திடு!
4. தாய்மண் மீட்கும் தமிழ்ப் படையை பயங்கரவாத இயக்கம் என அமெரிக்கா அழைப்பதை மறுத்திடு!

**செந்தமிழர் கடத்தல் சந்திரிகாவே!**
சரித்திரம்
நிலாப்பந்தில்
உலாவரும் நாளில்
எங்களைக்
கலிங்கத்துப் பரணி
பாடவைக்காதே!
இது வசந்தன் கவிபாடும் மண்
"தமிழ்ஈழ விடுதலை புலிப்படை"
அது
வீரக்களஞ்சியம்!
விடுதலை பெறும்வரை
அது
வீசுகின்ற கடலலை!
விண் இறக்கும் போர் மழை!

சூரியப் படைத் தலைவியே!
காது கேட்கிறதா...
கேட்க வில்லையென்றால்

காது உனக்கிருக்காது!
உன் கனவு பலிக்காது!
உன் வெற்றிக்கு உறுதி (ஜெயசிக்குறு)
படைக்கு
வெற்றி கிடைக் காது! - அதை
உன் மனம் பொறுக் காது! - இனி
உன் திட்டம் நடக்காது!

**அலரி மாளிகையில் அரண்டு கிடக்கும் சந்திரிகாவே!**
உன் அன்னை சிரிமாவோ
சுதந்திரம் கேட்போரைத் தின்றவள்! MAN EATER
நீயோ!
சுதந்திரத்தையே உண்பவள்! FREEDOM EATER
நித்தம் நஞ்சுமிழும் புத்த தலைவியாம்
உன் அன்னை
அன்று
கச்சத்தீவை விழுங்கினாள்!
நீயோ!
மிச்ச தீவையும் விழுங்கப்பார்க்கிறாய்!
அன்று
கச்சதீவைத் தூக்கிக் கொடுத்த
இந்திரா தேவியின்
சரித்திரம் சாம்பலானது.

சந்திரிகா தேவியே!
நீ என்ன
அடித்து வைத்த கற்சிலையா
அடி வாங்க வலு உண்டா?
வெடித்தெழும்பும் எரிமலையின் தீக்குழம்பில்
விழாதே! விழுந்தால்நீ சாம்பலாவாய்!
இது
வில்லாளன் **எல்லாளனின்** எச்சரிக்கை!

## தமிழா... தமிழா...

VALLUVAR PADIPAKAM
198, AV. DIV. LECLERC
93430, VILLETANEUSE
FRANCE

தமிழா தமிழா
உறங்கின் இனிநீ
உனது இனமேஅழியும்
புவியில் உயர்ந்து
கவியில் ஒளிரும்
தமிழர் சரிதம் முடியும்!
கடலின் அடியில்
உனது புகழும் கடிதில்
சென்று புதையும்! - தமிழா தமிழா...

ஈழம் எரியுதுடா - தமிழன்
இதயம் குமுறுதுடா!
எரியும் நெருப்பில்
ஈழத் தமிழர்
எலும்புகள் வேகுதடா!
இனிச்
சாம்பலே மிஞ்சும்
சஞ்சலம் ஈழச்
சரித்திரம் ஆனதடா!
அட
சிங்கள வெறியர்க்கு
இந்தியஅரசு
கைத்தடி யானதடா! - தமிழா தமிழா...

எங்கும் தமிழினமே - சிந்தும்
குருதியைப் பார்!
கோழைகள் ஆள்வதும்
வீரர்கள் வீழ்வதும்
வேதங்கள் ஆனதடா
அங்கு
உரிமைகள் கேட்போர்
உயிர்களைப் பறிப்பது
ஓலங்கள் ஆனதடா!
இந்தக்
காட்சியை மாற்றிட
தூக்கிடு கரங்களை
காலங்கள் மாறுமடா! - தமிழா தமிழா...


☆☆☆☆☆

# தமிழீழ நாட்டுப்பண்!

(நீராரும் கடலுடுத்த... எனும் இசையில்)

தாளக்கடல் தனில்முழங்கும்
    தமிழ்ஈழப் பொன்னணங்கே!
காலக்கடல் முன்தோன்றிக்
    கதிர்முத்தைக் கண்டவளே!
கான்ஆறு வளம்பெருக்க
    காந்தள்மலர் மணம்பரப்பத்
தேன்பாயும் மீன்பாடும்
    தெங்குபனை நெல்வளரும்
மகாவலிநற் கங்கையிலே
    மாணிக்கம் விளைப்பவளே!
புகார்த்தமிழன் மண்ணைப்போல்
    பொருள்கொழிக்கும் மலையகமே!
நிகரில்லா நெஞ்சுரத்தால்
    நிலைத்ததமிழ் யாழ்அணங்கே!—உன்
புகழ்வளர்க்கும் திறம்வியந்து
    புவிபோற்ற வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

– உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன்



தமிழீழ உணர்ச்சிக் கவிஞர்
காசி. ஆனந்தன்

தமிழக உணர்ச்சிக் கவிஞர்
சிங்காரவேலன்